## பெரியாழ்வார் அருளிச் செய்த
## பெரியாழ்வார் திருமொழி
## இரண்டாம் பத்து

### பத்தாம் திருமொழி - ஆற்றில் இருந்து
### ஆயர்மங்கையர் யசோதை பக்கல் கண்ணன் தீம்புகளைக் கூறி முறையிடுதல்

ஆற்றில் இருந்து * விளையாடுவோங்களை *
சேற்றால் எறிந்து * வளை துகில் கைக்கொண்டு **
காற்றில் கடியனாய் * ஓடி அகம் புக்கு *
மாற்றமும் தாரானால் இன்று முற்றும் *
வளைத் திறம் பேசானால் இன்று முற்றும் 1

குண்டலம் தாழக் * குழல் தாழ நாண் தாழ *
எண்திசையோரும் * இறைஞ்சித் தொழுதேத்த **
வண்டமர் பூங்குழலார் * துகில் கைக்கொண்டு *
விண் தோய் மரத்தானால் இன்று முற்றும் *
வேண்டவும் தாரானால் இன்று முற்றும் 2

தடம் படு தாமரைப் * பொய்கை கலக்கி *
விடம் படு நாகத்தை * வால் பற்றி ஈர்த்து **
படம் படு பைந்தலை * மேல் எழப் பாய்ந்திட்டு *
உடம்பை அசைத்தானால் இன்று முற்றும் *
உச்சியில் நின்றானால் இன்று முற்றும் 3

தேனுகன் ஆவி செகுத்துப் * பனங்கனி *
தான் எறிந்திட்ட * தடம் பெரும் தோளினால் **
வானவர் கோன் விட * வந்த மழை தடுத்து *
ஆனிரை காத்தானால் இன்று முற்றும் *
அவை உய்யக் கொண்டானால் இன்று முற்றும் 4

ஆய்ச்சியர் சேரி * அளை தயிர் பால் உண்டு *
பேர்த்தவர் கண்டு பிடிக்கப் * பிடியுண்டு **
வேய்த் தடந்தோளினார் * வெண்ணெய் கொள் மாட்டாது * அங்கு
ஆப்புண்டு இருந்தானால் இன்று முற்றும் *
அடி உண்டு அழுதானால் இன்று முற்றும் 5

தள்ளித் தளர் நடை இட்டு * இளம் பிள்ளையாய் *
உள்ளத்தின் உள்ளே * அவளை உற நோக்கி **
கள்ளத்தினால் வந்த * பேய்ச்சி முலை உயிர் *
துள்ளச் சுவைத்தானால் இன்று முற்றும் *
துவக்கற உண்டானால் இன்று முற்றும் 6

மாவலி வேள்வியில் * மாண் உருவாய்ச் சென்று *
மூவடி தாவென்று * இரந்த இம்மண்ணினை *
ஓரடி இட்டு * இரண்டாம் அடி தன்னிலே *
தாவடி இட்டானால் இன்று முற்றும் *
தரணி அளந்தானால் இன்று முற்றும் 7

தாழை தண்ணாம்பல் * தடம் பெரும் பொய்கை வாய் *
வாழு முதலை * வலைப்பட்டு வாதிப்புண் **
வேழம் துயர் கெட * விண்ணோர் பெருமானாய் *
ஆழி பணி கொண்டானால் இன்று முற்றும் *
அதற்கருள் செய்தானால் இன்று முற்றும் 8

வானத்து எழுந்த * மழை முகில் போல் * எங்கும்
கானத்து மேய்ந்து * களித்து விளையாடி **
ஏனத்து உருவாய் * இடந்த இம்மண்ணினை *
தானத்தே வைத்தானால் இன்று முற்றும் *
தரணி இடந்தானால் இன்று முற்றும் 9

அங்கமலக் கண்ணன் தன்னை * அசோதைக்கு *
மங்கை நல்லார்கள் தாம் * வந்து முறைப்பட்ட **
அங்கவர் சொல்லைப் * புதுவைக்கோன் பட்டன் சொல் *
இங்கிவை வல்லவர்க்கு * ஏதம் ஒன்றில்லையே 10

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---